செ.வெ.எண்: 58/ஜூன் நாள்: 23.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்டு வரும் விடுதி கட்டிடங்களை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இன்று (23.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்டு வரும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவியர்களுக்கான விடுதி கட்டிடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பரமக்குடியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.59 கோடி மதிப்பில் கல்லூரி மாணவியர்களுக்கான தங்கும் விடுதியும், ரூ.1.08 கோடி மதிப்பில் பள்ளி மாணவியர்களுக்கான தங்கும் விடுதியும் கட்டுவதற்கான கட்டுமான பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்றைய தினம் நேரடியாக சென்று புதிதாக கட்டப்பட்டு வரும் விடுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். கட்டுமானப் பணிகளை துரிதமாக மேற்கொண்டு விரைந்து முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதன்பின்பு பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கையின் 6-ஆம் நாள் முகாம் வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மொத்தம் 87 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும் இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 28 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டா ஆணைகளையும், இயற்கை மரணம் உதவித்தொகையாக 2 பயனாளிகளுக்கு தலா ரூ.12,500 வீதம் ரூ.25,000/-க்கான காசோலைகளையும், 4 பயனாளிகளுக்கு தலா ரூ.2,500/- வீதம் மொத்தம் ரூ.10,000/-க்கான காசோலைகளையும், மகன் திருமண உதவித்தொகையாக 1 பயனாளிக்கு ரூ.8,000/-க்கான காசோலையினையும், 5 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ராமையா, பரமக்குடி வட்டாட்சியர் திரு.செய்யது முகமது, துணை ஆட்சியர் திரு.அமிர்தலிங்கம் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**